10 .02.2021

Case No.OS.121/2013

DW.1 - ராமலிங்கம் – வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் ஏகாம்பரம்நல்லூரில் குடியிருக்கிறேன் குப்பன் எனது பெரியப்பா. நிலம் சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளார். சொத்து பூர்வீகமாக யாருக்கு பாத்தியம் என்று சொன்னால் என் தாத்தாவிற்கு குப்பன், சுப்பிரமணி, சீனிவாசன் வாரிசுகள். என் தாத்தா பெயர் வீராசாமி. என் தாத்தாவிற்கு 3 மகன்கள். மேற்படி மூவருமே ஏகாம்பரநல்லூரில் தான் இருந்துவந்தார்கள்.சுப்பிரமணி, சீனிவாசன் காலமாகிவிட்டார்கள். என் தாத்தா வீராசாமிக்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் என்றால் 2 ஏக்கர் இருந்தது. பாகப்பிரிவினை எதுவும் எழுதிகொண்டார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. பெரியவரைதான் கேட்கவேண்டும். சீனிவாசன் இறந்துவிட்டார். அவர் ஆந்தராவில் திருமணம் செய்துகொள்ளாமல் வேறொரு பெண்ணுடன் இருந்துவிட்டு பின்னர் இங்கு வந்துவிட்டார். ஆந்தராவிற்கு போவதற்கு முன்பாகவே கடனாகி சென்றுவிட்டார். அந்த கடனுக்காக சொத்தை எங்களுக்கு எழுதி கொடுத்துவிட்டார். 2 ஏக்கர் சொத்தை எங்களுக்கு எழுதி கொடுத்துவிட்டார். என் அப்பா குப்பனுக்கு 2 ஏக்கர் சொத்து வந்ததா என்றால் இல்லை. சீனிவாசனுக்கு 2 ஏக்கர் புஞ்சை நிலத்தையும், 1 ஏக்கர் சில்லரை நஞ்சை நிலத்தையும் கொடுத்தார்கள். அவருக்குதான் அதிகமான பாகம் கொடுக்கப்பட்டது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.